**ஜனவரி -25**

**"நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." - மத் 6:34**

நாம் நம்முடைய இருதயத்தின் பிரதான எண்ணங்களை அவருடைய ஊழியத்திற்கும் அவருடைய நீதியை வளர்த்து விடுவதற்கும் அவருடைய இராஜ்ஜியம் நிலைபெறுவதற்கும் நாம் செலவிட்டால் தேவன் தம்மை நேசிக்கிறவர்களுக்கு அவர் வாக்குக் கொடுத்தபடி நாம் வருங்க்காலத்தைப்பற்றி கவலை கொண்டிருத்தல் அவசியமில்லை. நாம் அவர் சீடர்களாக இருப்பதால் அனுதினமும் நமது தொல்லைகளும் உபத்திரவங்களும் இருக்கும் இவைகள் நமக்குத் தேவை அப்போதுதான் நாம் அவர் நம்மை இடுக்கமான பாதைகளின் வழி நடத்தும் கரத்தைக் கண்டு கொள்ள இயலும். அன்றைக்கு அதன் அதன் பாடுபோதும். நாம் தேவனுக்கு எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போமாக. நமக்கு ஒவ்வொருநாளும் அவருடைய கிருபை போதுமானதாக இருக்குமென்று அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

**- Z ’98, 44 (R 2259).**

கவலை நம்முடைய நெற்றிகளில் மாத்திரம் சுருக்கங்களை உண்டுபண்ணுவதில்லை. நம்முடைய இருதயத்திலும் சுருக்கங்களை உண்டுபண்ணும். தேவன் நமக்கு அன்றாடம் கொடுக்கின்ற ஈவுகளில் நம்முடைய இருதயம் பூரண திருப்தி அடைய வேண்டும். அப்படிப்பட்ட இருதயம் எல்லாக் கவலைகளிலிருந்தும் விடுபட்டு இருப்பது மாத்திரமின்றி அது சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் நிரப்பப்பட்டிருக்கும். அது வருங்காலத்தை மிக நம்பிக்கையோடு எதிர்பார்க்கும். ஆகவே நமது ஜீவியத்திற்கு என்று வாக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உறுதிகள், எல்லாக் காரியங்களிலும் இன்னும் வருங்காலத்திலும் நன்மை பயக்குவனவாக இருக்கும். **- P ’33, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 6:25-33; யோபு 38:41; சங் 104:10,11; 147:9; லூக் 12:24-26,31; பிலி 4:19; 1இராஜா 3:13; சங் 34:9; 37:25; ரோம 8:32; சங் 127:2; மத் 13:22; லூக் 21:34; 1கொரி 7:32,33; பிலி 4:6; 2தீமோ 2:4; சங் 37:5; 55:22; எரே 17:7,8; எபி 13:5.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 230 (R 5508).

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சமாளிக்கப்பட்டன? அவை எவற்றில் முடிந்தன?